வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 429/2020

வழக்கு சாட்சி LW2 /PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அமலதாஸ், உதவி ஆய்வாளர் (ஓய்வு) | ஜாதி | |
| கணவர்/தந்தை | மோசஸ் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 69 |

தேதி 13.02.2025

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் சென்னை மாதவரம் மதுவிலக்கு அமல் பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 30.09.2013 ஆண்டு மது விலக்கு சம்மந்தமாக நானும், முதல் நிலை காவலர் திருலோகசந்தர், ஆய்வாளர், கண்ணன் ஆகியோர்களுடன் மதுவிலக்கு சம்மந்தமாக மாதவரம் மதுவிலக்கு அமல்பிரிவில் எண்ணூர் காவல் நிலையத்தில் மது விற்பனை கடை 8824 அதோடு இணைந்துள்ள மதுவிலக்கு மது அருந்தகூடம் கண்காணிக்கும்போது இரண்டு நபர்கள் எங்களை கண்டதும் ஓட முயற்சித்தனர். நாங்கள் அவர்களை விரட்டி சென்று பிடிக்க முயற்சித்தபோது ஒருவர் தப்பி ஓடிவிட்டார். மற்றொரு நபரை விசாரணை செய்தபோது தன்னுடைய பெயர் குமார், த/பெ. கருப்பையா என்றும் அவரை விசாரித்தபோது ஓடிய நபரின் பெயர் ஆறுமுகம் த/பெ. ராமதாஸ் எனவும் அவர்தான் மதுபான கூடத்தின் உரிமையாளர் எனவும் கூறினார். அதன்பிறகு குமாரிடம் இருந்து 650

மி.லிட்டர் கெமெண்டோ பீர் பாட்டில் 22 எண்ணிக்கை 375 மி.லி. கொள்ளளவு கொண்ட பிளாக் பேரர் பிராந்தி 48பாட்டில் எண்ணிக்கையும் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வாளர் அவர்களால் அதனை மகஜர் மூலம் கைப்பற்ற முயன்ற போது பொதுமக்கள் சாட்சி கையொப்பம் இட முன்வராததால் நாங்களே சாட்சியாக இருந்து மகஜரில் கையொப்பம் செய்தோம். மேற்படி விசாரணையில் எதிரிகள் அரசு அனுமதியின்றி சட்டத்திற்கு விரோதமாக மேற்படி மதுபாட்டில்களை வைத்திருந்ததால் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி எதிரியை 17 மணிக்கு கைது செய்து 17.15 மணிக்கு மகஜரில் சொத்துக்களை கைப்பற்றி காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணைக்கு பின்னிட்டு தக்க வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு ஆய்வாளர் எதிரியை உட்படுத்தினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

எங்கள் ஆய்வாளருக்கு தகவல் கிடைக்கப்பெற்று சம்பவ இடத்திற்கு சென்றோமா என்றால் எங்களது பணியே ஆய்வு மேற்கொள்வதுதான். காவல் நிலையத்தில் இருந்து எத்தனை மணிக்கு ஆய்விற்கு புறப்பட்டு அங்கு சென்றோம் என்றால் 4 மணிக்கு புறப்பட்டு 4.45 மணிக்கு சென்று அடைந்தோம். நான் செல்லும்போது, மதுகடையும், மதுஅருந்தும் கூடமும் திறந்திருந்தது என்றால் ஆமாம். சம்பவ இடம் என்னவென்றால் எண்ணூர் கத்திவாக்கம். கத்திவாக்கம் சம்பவ இடத்தில் இருந்து எம்.5 காவல் நிலையம் 400 மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் ஆமாம். மதுபான கடையின் ஊழியர்கள் அரசு ஊழியர்கள் என்றால் ஆமாம். மது அருந்து கூடம் 15 அடி தூரத்தில்தான் உள்ளது என்றால் ஆமாம். மதுபான கடை ஊழியர்களோ வேறு நபர்களோ சட்டத்திற்கு புறம்பாக மதுபானம் விற்பனை செய்வதாக எங்களிடமும், எம்.5 காவல் நிலையத்திலோ புகார் அளிக்கவில்லை என்றால்

சரிதான். சம்பவம் நடக்காததால்தான் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். உரிமையாளர், வேலை பார்ப்பவர்கள் என்பதற்கு ஆவணங்களை சரிபார்த்தோமா என்றால் மது அருந்தும் கூடத்தில் உரிமையாளர் உரிமம் ஆனது பெயருடன் மாட்டப்பட்டிருக்கும். எனது விசாரணையில் மேற்படி உரிமத்தினை கூறினேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் செல்லும்போது மதுகடை, கூடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 50 நபர்கள். சாட்சிகள் முன்வரவில்லை என்பது நம்பகத்தன்மையற்றது என்றால் சரியல்ல. சாட்சியம் அளிக்க மறுக்கும் பட்சத்தில் வழக்கு பதிவு செய்யலாம் என்றால் சரியல்ல. எத்தனை மணியில் இருந்து மதுபானமானது விற்பனை செய்யப்பட்டு கொண்டு இருந்தது என்றால் காலை 8 மணி முதல். என்னிடம் குறுக்கு விசாரணையில் கூறும் விபரங்களை உயர் அதிகாரிகளின் விசாரணையின்போது நான் கூறவில்லை என்றால் சரியல்ல. மதுபானம் விற்பனை செய்ததில் எவ்வளவு தொகையானது கைப்பற்றப்பட்டது என்றால் தொகை கைப்பற்றப்படவில்லை. மதுபான கூடத்தில் மது அருந்த எதிரிகள் சென்றார்கள் என்றாலும், வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத நபர்கள் என்றாலும் கணக்கெடுப்பிற்காக எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட தடைய பொருட்கள் நீதிமன்றத்தில் ஒப்படைவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.